மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்

# RCOP.NO.2/2022

# Old.No.99/2016

# PW 1

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

பெயர் : Tmt. Ramuammal மதம் :

தந்தை / கணவர் பெயர். : Tr.J.Natrajan ஊர் :

வயது :

தொழில் :

இனம் :

கிராமம் :

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1999ம் ஆண்டிலிருந்து மனு சொத்தில் எதிர்மனுதாரர் வாடகைதாரராக இருந்து வருகிறார் என்றால் ஆம். இரண்டு கடையிலில் வீட்டு உபயோக பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரம் செய்து வருகிறார். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளது எனது வழக்கறிஞர் படித்து காண்பித்து அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். ம.சாஆ1 மூலம் 2001ல் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு வேறு எந்த ஒப்பந்தமும் நானும் எதிர்மனுதாரரும் எதுவும் ஏற்படுத்த வில்லை என்றால் ஆம்.

இரண்டு கடைக்கும் சேர்த்து மொத்தம் ரூ.2200/- ஏதிர்மனுதாரர் கடைசியாக வாடகை செலுத்தி வந்துள்ளார் என்றால் ஆம்.இரண்டு கடைக்களுக்கும் வாடகை முன் பணமாக

ரூ.60ஆயிரம் கொடுத்து வந்தார் என்றால் ஆம். கடந்த 25 வருடங்களாக எதிர்மனுதாரர் மனு சொத்தில் கழிவறை வசதி செய்து கொடுக்குமாறு கேட்ட பின்பும் நான் எதுவும் செய்து கொடுக்க வில்லை என்றால் வாடகைக்கு விடும்போது அவ்வாறு வசதிகள் எதுவும் இல்லை என்று ஒப்புக்கொண்டுதான் கடைக்களுக்கு வாடகைக்கு வந்தார். நான் கூறுவது என்றும் அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இருவருக்கிடையே பேச்சு வார்த்தையில் தான் ஒப்புக்கொண்டோம் ஆவணம் எதுவும் இல்லை.

மனு சொத்தில் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறு எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகும் எந்த வசதிகளும் செய்துக்கொடுக்கவில்லை என்றால் அங்கு எந்த இடமும் இல்லை. வழக்கு உள்ளதால் எதுவும் நான் செய்யவில்லை. மனு சொத்தில் இரண்டாவது மற்றும் முதலாம் மாடியில் என் வீடு உள்ளது என்றால் ஆம் பிள்ளைகள் உள்ளார்கள். மனு சொத்தை தவிர வேறு ஏதேனும் தடையம் உள்ளதா என்றால் படியின் கீழ் சின்ன அறை உள்ளது. எதிர்மனுதாரர் தான் மனு சொத்தில் முதலில் வாடகைக்கு வந்துள்ளார். அதற்கு முன்பு அந்த சின்ன கடையில் பூ கடை இருந்தது.

எதிர்மனுதாரரின் கடையின் பெயர் பலகையை நான் எடுத்து விட்டேனா என்றால் நகராட்சியில் கூறியதால் எடுக்கப்பட்டது. நகராட்சியில் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றும் நான் பொய்யாக அவ்வாறு குறிப்பிடுகின்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஆலந்தூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 294/2005 என்ற வழக்கில் எனக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் பெற்றுள்ளாரா என்றால் அவர் வாங்கியிருக்கலாம். எனது மகனுக்கு மனு சொத்தில் கடை வைத்து தர வேண்டும் என்று மனுசொத்து தாக்கல் செய்துள்ளேன்.

மனு சொத்திக்கான கூடுதல் வாடகை பெற மனுவினை தாக்கல் செய்துள்ளேனா அல்லது எதிர்மனுதாரர் மனுசொத்திலிருந்து காலி செய்ய மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாலி செய்யும் வரை கூடுதல் வாடகை பெற மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தினை மனுவியிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடபடவில்லை என்றால் ஆம் தனியாக போட்டுள்ளேன். ஆர்.சி.ஒ.பி.33/2009 என்ற மனுவினை நான் தாக்கல் செய்து அவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா என்றால் மேல் முறையீட்டில் எனக்கு சாதகமாக உத்தரவு வந்தது. மேற்படி மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை மாண்பிமிகு சென்னை உயர்

நீதிமன்றம் தள்ளுபடி செய்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அவை தள்ளுபடி ஆனதால் தான் நான் தற்போது இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை வழக்கறிஞர் கூறியதின் பேரில் தாக்கல் செய்தேன்.

கடந்த 7.06.2022 ம் தேதியில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சாஆ 5,6 பொறியாளர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை நீதிமன்றம் ரத்து செய்துள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆர்சிஓபி 61/2016 தற்போது ஆலந்தூர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆம். எதிர்மனுதாரரை நான் மனு சொத்திலிருந்து காலி செய்துவிடவேண்டும் என்பதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல அவர் தான் அறிவிப்பு அனுப்பியுள்ளார். சட்டப்படி அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். நான் மனு சொத்திற்கு நான் அதிகமான மின் கட்டணம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எனது பணத்தை போட்டுதான் மின் கட்டணம் செலுத்தி வருகிறேன்.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.